00036

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018
**ESC2221/EPA2421** – முன்பிள்ளைப் பருவத்தில் பொருத்தப்பாடு பிரச்சினைகள்
இறுதிப்பரீட்சை - 2018
காலம் : 03 மணித்தியாலங்கள்

---

திகதி: 29.12.2018 நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. நன்கு பொருத்தப்பாடான ஆளுமை கொண்டிருக்கும் பிள்ளைகளின் ஐந்து (05) பண்புகளைப் பட்டியலிடுக.

02. பிள்ளைகளில் வளர்ந்தோரால் மிகைத் தற்பெருமையை (Super ego) அபிவிருத்தி செய்வதற்கான முறைகள் இரண்டை (02) விளக்குக.

03. பெற்றோரின் தவறான நடைமுறைகள் பிள்ளைகளின் குற்ற உணர்வை விருத்தி செய்யும் என்பதை உதாரணங்கள் சகிதம் விளக்குக.

04. "இரு நிகழ்வுகளுக்கிடையிலான தொடர்பு துலங்கலுக்கு வழிவகுக்கும்". ஒரு உதாரணம் மூலம் மேலுள்ள கூற்றை நிறுவுக.

05. பாடசாலை எனும் பயத்தினால் இடர்படும் பிள்ளைகள் காட்டும் புகார்கள் இரண்டை (02) சுருக்கமாக விளக்குக.

06. பிள்ளை விருத்தியில் மிகையாக வெட்கப்படும் தன்மையின் பாதிப்புக்கள் மூன்றை (03) சுருக்கமாக விளக்குக.

07. "இனங்காணுதல்" என்பதனால் நீர் கருதுவது யாது?

08. "விளைவு விதி" எனும் தத்துவத்தின் அடிப்படையில் எவ்வாறு தனிநபர்களின் நடத்தை வலுவூட்டப்படும்.

(8x5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) சிக்மன்ட் பிரய்டின் கருத்துக்கமைய மனித மூளையின் அடிப்படைக் கட்டமைப்பை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) இரண்டு (02) உதாரணங்கள் மூலம் எவ்வாறு மேற்கூறிய அடிப்படை கட்டமைப்புகள் மனித மூளையில் செயற்படுகின்றது என்பதை விளக்குக. (இரண்டு ஆளுமை கட்டமைப்புகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்)

(10 புள்ளிகள்)

10. (i) அவதானிப்புக் கற்றல் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளின் நடத்தைகளை உருவாக்க மேற்கூறிய கொள்கையின் கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை உதாரணங்களின் மூலம் விளக்குக.

(15 புள்ளிகள்)

11. (i) தாய்க்கும் பிள்ளைக்குமிடையிலான ஆரம்ப பிணைப்பின் மூன்று (03) பயன்களை ஆராய்க.

(06 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளிடம் நன்னிலையான பிணைப்பை விருத்தி செய்வதில் அதிகாரபூர்வ பெற்றோரியல் முறை ஆதிக்கப் பெற்றோரியலிலும் பார்க்கப் பயனுறுதியானது. ஒவ்வொரு பெற்றோரியல் முறையின் இயல்புகளைக் கருத்திற்கொண்டு மேற்கூறிய கூற்றை விளக்குக.

(14 புள்ளிகள்)

12. (i) பிள்ளைகளில் காணப்படும் பொதுவான பிரச்சினைசார் நடத்தைகள் ஐந்தைப் (05) பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

(ii) அவற்றில் ஏதாவது இரண்டு (02) பிரச்சினைகளைத் தெரிவு செய்து ஒவ்வொரு நடத்தைப் பிரச்சினைகளினதும் இயல்புகளை விளக்குக

(08 புள்ளிகள்)

(iii) வினா (ii)ல் விபரித்த ஒரு நடத்தைப் பிரச்சினையை தெரிவுசெய்து, அதை இழிவளவாக்குவதற்கான அல்லது வெற்றிகொள்வதற்குரிய வழி முறைகளை குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

13. “தற்போதைய தொழினுட்ப வளர்ச்சியானது பிள்ளைகளின் பொருத்தப்பாட்டு பிரச்சினைகளின் விருத்திக்கு இட்டுச் செல்கின்றது”

(i) வெகுசனத் தொடர்பு சாதன வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு மெற்கூறிய கூற்றை ஒரு உதாரணம் தந்து நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ii) ஒரு முன்பள்ளி ஆசிரியர் என்ற வகையில மேற்கூறிய ஊடகத்தின் பயன்பாடு தொடர்பாக முகாமை செய்வதற்கு எவ்வாறு ஆலோசனை வழுங்குவீர்.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*